DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: STC.No.1043/2018**

Deposition of witness for Prosecution அ.சா.7

Name : தேவிகா
Father/ Husband Name : தவமணி
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 30.03.2026.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் தேவகோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கூடுதல் பொறுப்பாக கடந்த 06.11.2015ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலைய குற்ற எண்.480/2015 இதசா. பிரிவுகள் 279,304(ய) வழக்கின் புலன்விசாரணையை மேற்கொண்டேன். எனக்கு முன்னால் சார்பு ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து சாட்சிகள் விசாரணை செய்த போது காயம்பட்ட சின்னதம்பி மருத்துவமனையில் இறந்துவிட்ட தகவல் கிடைத்து வழக்கின் புலன்விசாரணையை ஆய்வாளர் திரு.அண்ணாதுரை அவர்களிடம் மாற்றிவிட்டு அவர் புலன் விசாரணைக்கு இடையில் பணிமாறுதல் பெற்று சென்றுவிட்டதால் தொடர் புலன்விசாரணைக்கு நான் வழக்குகோப்பை எடுத்துகொண்டேன். நான் புலன்விசாரணை மேற்கொண்டு சம்பவ இடம் சென்று, சாட்சிகளை விசாரணை செய்ததில் சார்பு ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர்களிடம் கூறிய சங்கதிகளை என்னிடம் கூறியதால் நான் தனிதனியாக வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை. வழக்கின் எதிரி சின்னையாவை 11.01.2016 ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தின் முன்பாக வைத்து கைது செய்து காவல் நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 63 AX 4673 TVS sport இருசக்கர வாகனத்தை வாகன ஆய்விற்கு

உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **(மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் உதவி பேராசிரியர் திரு.சூரியநாராணன் அவர்களை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **(மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது)** பின்னர் தலைமை காவலர் திரு.தாசன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி தாக்கல் அறிக்கை பதிவுசெய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார்தாரர் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் சம்பவத்தில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரிக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றி இறுதிஅறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.6ல் புதிதாக சேதங்கள் ஏதும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எந்த சாட்சியங்களையும் விசாரிக்கவில்லை என்றும் என் மேல் அதிகாரிகளின் உத்தரவின்படி முன்புவிசாரித்த அதிகாரிகள் ஏற்படுத்தி இருந்த ஆவணங்களின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி சாலைவிதிகளை கடைபிடித்து முறையாக வாகனத்தை ஓட்டி வந்தபோது இறந்த சின்னதம்பி அஜாக்கிரதையாகவும் கவன குறைவாகவும் சாலையை கடக்க முற்பட்டதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி இறந்த சின்னதம்பி மீது கொடுத்த புகார் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d.D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை